## வாக்குகளைப் பிரிப்பதற்காகவே கூட்டணி விலகல் நாடகம்!

# மோடிக்கு எதிராக பழனிச்சாமி பேசாதது ஏன்?

## “புதிய தலைமுறை” தொலைக்காட்சி ‘நேர்பட பேசு’ விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடி கேள்வி!

**மூத்த பத்திரிகையாளர் இந்திரகுமார் தேரடி “புதிய தலைமுறை தொலைக்காட்சியில் ‘நேர்பட பேசு’ விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:-**

தற்போது நடக்கப் போவது நாடாளு மன்றத்தேர்தல், இந்தத் தேர்தலில் இந்தியாவின் பிரதமர் யார் என்பதை தீர்மானிக்கின்ற தேர்தல், அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா எந்தத் திசையை நோக்கி பயணிக்கப் போகிறது என்பதை தீர்மானிக்கின்ற தேர்தல் வரப்போகின்ற நாடாளுமன்றத் தேர்தல்.

அப்போது அந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிர்ப்பு வாக்குகள் இல்லை என்று நிராகரிக்கின்றது என்பது அந்த தேர்தலுக்கே செய்கின்ற துரோகம். மோடிக்கு எதிராக தற்போது எதிர்ப்பு தீவிரமடைந்து இருக்கிறது. 2019 க்கு முன்பு இருந்த சிக்கல்களை விட 2019க்கு பிறகு சந்திக்கின்ற சிக்கல் இன்னும் அரசியல் ரீதியாக தீவிரமடைந்து இருக்கின்றன.

நீதிமன்றங்களிலும் சரி, கவர்னர்மாளிகைகளிலும் சரி, சட்டப் பேரவைகளிலும் சரி தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களால் அடுத்து அடுத்து அரசியல் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் திருமாவளவன் குறிப்பிடுவது பி.ஜே.பி. எதிர்ப்பு வாக்குகளை அப்படி சிதறடிப்பது என்று அவர் குறிப்பிடுகிறார். இந்தியாவில் நடைபெற்று இருக்கக் கூடிய அதாவது இதற்கு முன்பு நடைபெற்று இருக்கின்ற எல்லாத் தேர்தல்களிலும் பி.ஜே.பி. பெற்ற வாக்குகளை விட? பி.ஜே.பிக்கு எதிராக பதிவான வாக்குகள் தான் அதிகமாக இருக்கிறது. அப்போ இந்துக்கள் அத்தனை பேரும் எங்கள் பின்னால் நிற்கிறார்கள் என்று அவர்கள் சொல்கின்றதே பொய்யாகுகின்றது.

**தமிழ்நாட்டில் அதே விஷயம் தொடர்ச்சியாக இங்கே பின்பற்றப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில் இன்றைக்கு இந்தியா முழுவதும் ‘இந்தியா கூட்டணி’ என்று சேர்ந்துள்ளது.**

**இப்போது இந்துக்களின் பாதுகாவலர், இந்துக்களின் சாம்ராட் என்று மோடி தன்னை சொல்லி வருகிறார். அந்த இந்துக்களுக்கு பிரதமர் மோடி என்ன செய்து இருக்கிறார். பெரும்பான்மையான இந்துக்களுக்கு, மக்களுக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, பட்டியல் சமூக மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு பகுஜன் என்று அறியப்படுகின்ற இந்த மக்களுக்கு என்ன நலத்திட்டங்களை மோடி கொண்டு வந்து சேர்த்து இருக்கிறார் என்ற கேள்விக்கு இந்தத் தேர்தல் பதிலளிக்கப்போகிறது. அதிலே எடப்பாடி பழனிச்சாமியினுடைய செயல் என்ன அப்படி என்பது தான் கேள்வி எழுப்பப்படுகிறது.**

இரண்டாவது சமீபத்தில் இன்றைக்கு எல்.பி.ஜி. மானியத்துக்காக ஒப்புதல் கொடுத்து இருக்கிறார்கள். 2020 இல் கொரோனா காலக்கட்டத்திற்கு மத்தியில் எல்.பி.ஜி. மானியம் நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட மானியம் 2023 வரைக்கும் வழங்கப்படவில்லை. இதற்கு இடைப்பட்ட காலத்தில் என்ன நடந்தது? அந்த மூன்று ஆண்டுகளுக்கான இழப்பீட்டுத் தொகையை யார் தரப்போகிறார்கள்? என்கின்ற கேள்விக்கு மோடி அரசு பதில் சொல்லப் போகிறதா? அந்த பதிலை எடப்பாடி பழனிச்சாமி கேட்டு வாங்கித் தந்து இருக்கிறாரா? பெட்ரோல் விலை என்னமாக ஏறிப்போய் இருக்கிறது? 2019 இல் எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரியவில்லையா? இவையெல்லாம் தெரியாமல் தான் அவர்களுடன் எடப்பாடி பழனிச்சாமி கூட்டணி வைத்து இருந்தாரா? இப்போது வாக்கை பிரிப்பதற்காக இந்த கூட்டணி விலகல் நடந்திருக்கின்றது என்று திருமாவளவன் கொடுக்கின்ற சந்தேகத்திற்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தான் காரண கர்த்தாவாக இருக்கிறார்.

சமீபத்தில் இராமர் கோவில் திறந்தாங்க. அந்த இராமர் கோவில் திறப்புக்கு, நாங்கள் கரசேவைக்கு எல்லாம் ஆள்அனுப்பினோம் என்று கே.பி.முனுசாமி பேசினார். இது தான் தமிழ்நாட்டில் இருக்கின்ற சிறுபான்மை மக்களை பாதுகாக்கின்ற இலட்சணமா? (இராமரை வைத்து மக்களை ஏமாற்றினால் இராமர் நிச்சயம் தண்டனை கொடுப்பார் என்று முனுசாமி பேசினார்) இராமரை வைத்து மக்களை ஏமாற்றுபவர்கள் யார் என்ற கேள்விக்கு எடப்பாடி பழனிச்சாமியின் பதில் என்ன?

மோடியை மறைமுகமாக எதிர்ப்பதற்கு என்ன அவர் திரைப்படமா எடுக்கிறார்? அதில் உள்ள குறியீடுகளை கண்டறிந்து பேசுவதற்கு, மக்கள் மத்தியில் அரசியல் பேசுகிறார். அந்த அரசியலை வெளிப்படையாக பேச வேண்டும். இதில் சிறுபான்மை வாக்குகள் என்பதற்காகத்தான் எடப்பாடி பி.ஜே.பி.யில் இருந்து வெளியே வந்த உடனே பேசிய வரிகள். சிறுபான்மை வாக்குகள் மட்டும் தான் பி.ஜே.பி. எதிர்ப்பு வாக்குகள் என்று சொல்லுவதே முதலில் அயோக்கியத்தனமானது.

**இந்தியாவில் இருக்கக் கூடிய பெரும்பான்மையான இந்துக்கள் பி.ஜே.பி.க்கு எதிராக வாக்களித்து இருக்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், அதற்கு முந்தைய நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடர்ந்து நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களிலும், அப்போது பெரும்பான்மை இந்துக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள். இல்லை இந்துக்களுக்கு பிரச்சினை**

**இந்திரகுமார் தேரடி**

மூத்த பத்திரிகையாளர்



**இல்லை இஸ்லாமியர்களுக்கும், கிறித்துவர்களுக்கும், பௌத்தவர்களுக்கும் தான் பிரச்சினை என்று சொல்வதே மோசடியான வாதம். இவர்கள் கொண்டு வந்து இருக்கின்ற ஒவ்வொரு திட்டத்தாலும் பாதிக்கப்பட்டு இருப்பது யார் என்றால் பெரும்பான்மையான இந்துக்கள் தான். அந்தப் பெரும்பான்மையான இந்துக்களுக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் என்ன நிவாரணத்தை வாங்கிக் கொடுக்கப்போகிறார்?**
செ ன்னை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டது யார்? பெரும்பான்மையான இந்து மக்கள் தான் பாதிக்கப்பட்டார்கள். எல்.பி.ஜி. சிலிண்டர் விலை ஏற்றப்பட்டதால் பாதிக்கப்பட்டது யார் பெரும்பாலான இந்துக்கள் தான். பருப்பு விலை, அரிசி விலை எல்லாம் 40 சதவிகிதம், 53 சதவிகிதத்திற்கும் மேல் ஏறி இருக்கின்றது என்ற குற்றச்சாட்டால் பாதிக்கப்பட்டது யாரு? பெரும்பான்மையான இந்துக்கள் தான். ரிசர்வேசன் கூடாது என்று இவர்கள் போய் உச்சநீதிமன்றத்தில் வழக்கு போடுகிறார்கள். தமிழ்நாடு ஒவ்வொரு வழக்கிலும் எதிர்த் தரப்பாக ஆஜராகி ரிசர்வேசனுக்கா வாதாடியது. அருந்ததியர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக வாதாடியது ஒன்றிய அரசு தரப்புதான். அந்தத் தரப்புக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் என்ன பதிலடியை கொடுத்திருக்கிறார்? சிறுபான்மையினர் சிறுபான்மையினர் என்று மட்டும் பேசுகிறாரே அவர் பெரும்பான்மையான இந்துக்களுக்கு என்ன நீதியை பெற்றுத் தந்திருக்கிறார்?

**மோடியை மறைமுகமாக எதிர்ப்பதற்கு என்ன அவர் திரைப்படமா எடுக்கிறார்? அதில் உள்ள குறியீடுகளை கண்டறிந்து பேசுவதற்கு, மக்கள் மத்தியில் அரசியல் பேசுகிறார். அந்த அரசியலை வெளிப்படையாக பேச வேண்டும். இதில் சிறுபான்மை வாக்குகள் என்பதற்காகத்தான் எடப்பாடி பி.ஜே.பி.யில் இருந்து வெளியே வந்த உடனே பேசிய வரிகள். சிறுபான்மை வாக்குகள் மட்டும் தான் பி.ஜே.பி. எதிர்ப்பு வாக்குகள் என்று சொல்லுவதே முதலில் அயோக்கியத்தனமானது.**

எடப்பாடி பழனிச்சாமி பா.ஜ.க.வில் இருந்து வெளியே வந்த உடனே நான் பா.ஜ.க.வில் இருந்து வெளியே வந்து விட்டேன். இனிமேல் இஸ்லாமியர்களுக்கு பாதுகாப்பு அரணாக, சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு அரணாக இருக்கப் போறேன், இனிமேல் எல்லாம் சுத்த பத்தமாகத் தான் இருக்கும் என்று சொல்லி எடப்பாடி பழனிச்சாமி தான் முதலில் டிக்ளேர் செய்கிறார்.

**ஆனால் அவர் வைக்கின்ற விமர்சனங்கள் இப்போது வரைக்கும் மோடிக்கு எதிராக எதாவது ஒரு பிரச்சாரக் கூட்டத்தில் பேசி இருக்கிறாரா? மோடி எடுத்துக் கொடுக்கின்ற அஜண்டா பாயிண்ட்ஸை அப்படியே இவர் பின்பற்றி தமிழ்நாடு முழுக்க இவர்போராட்டமாக நடத்துகிறார். மோடி வந்து போதைப்பொருள் மாநிலம் என்று பேசிவிட்டுப் போகிறார். இந்தியாவிலேயே மிகப்பெரிய போதைப்பொருள் மாநிலமாக இருப்பது உத்தரப்பிரதேசம்.**

**அங்கே விட்டு விட்டு தமிழ் நாட்டில் 0.1 சதவிகித கஞ்சாவும், 0.06 சதவிகிதம் மற்ற போதைப் பொருள்கள் பயன்பட்டுக்கொண்டு இருக்கின்ற குறைவான மாநிலத்தில், மோடி செட் செய்கின்ற அஜண்டாவிற்கு மாநிலம் முழுவதும் வேலை பார்த்துக் கொண்டு இருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.**

இதில் பாதிக்கப்படுவது சிறுபான்மையினர் மட்டுமல்ல பெரும்பான்மை இந்துக்கள். இந்த பெரும்பான்மை இந்துக்களுக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பெற்றுத் தந்த நீதி என்ன என்கின்ற கேள்விக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

ஜல்லிக்கட்டு என்ற ஒரு விளையாட்டு அந்த விளையாட்டில் பெரும்பான்மையாக கலந்து கொண்டு விளையாடுபவர்கள் யார்? இந்து சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் தான். அந்த இந்து சமுதாய மக்கள், அந்த ஜல்லிக்கட்டு கேட்டு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் போராட்டம் நடத்தினார்கள்.

அந்தப்போராட்டத்திற்கு தி.மு.க. இங்கிருந்து தொடர்ந்து வழக்கு நடத்தியது. அ.தி.மு.க. வழக்கு நடத்துகிறேன் என்கின்ற பெயரில் சும்மா இருந்தது.

ஓ.பி.எஸை கை கழுவி விட்டு விட்டோம். ஜெயலலிதா இறந்து விட்டார் அவர்தான் கரசேவைக்கு ஆட்களை அனுப்பினார். அதனால் அவர் எங்கள் தலைவர் இல்லை என்று நிராகரிக்கப்போகிறாரா? இங்கே ஆர்.எஸ்.எஸை.கால் ஊன்ற விட்டார்கள் அவர் இப்போது இறந்து விட்டார், அதனால் இப்போது அவர்களை புறக்கணிக்கிறோம் என்று எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பாரா? ஓ.பி.எஸை மட்டும் கை கழுவுவதற்கான காரணம் என்ன? பெரும்பான்மை இந்துக்களை ஏமாற்றுவதற்காக.

அந்த ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் ஒன்றிய அரசு தான் தமிழ்நாடு அரசுக்கு எதிராக வாதாடியது. அனிமல் போர்டு ஆப் இந்தியா, எல்.முருகன் அவர்களுக்கு கீழ் இருக்கக் கூடிய அமைப்பு . அந்த அமைப்பிடம் எல்.முருகனை சொல்ல சொல்லி நிறுத்தி இருக்கலாமே. எதற்கு வழக்கு நடத்துகிறீர்கள் என்று கேட்டு இருக்கலாமே? கேட்க வில்லை. இங்கே இருக்கக் கூடிய பெரும்பான்மை இந்துக்களுக்கு துரோகம் செய்துகொண்டிருக்கக் கூடிய இந்துக்களுக்கு எப்போதும் கூட்டணியில் பாதுகாப்பு அரணாக இருந்து கொண்டு பா.ஜ.க.வினருக்கு பாதுகாப்பை தந்து கொண்டு இருந்தார் எடப்பாடி பழனிச்சாமி.

சிறுபான்மையினர் வாக்குகளை குறி வைத்து அ.தி.மு.க.வை தனியே நிற்க வைத்து அதில் குளிர் காய பா.ஜ.க. நினைக்கிறது என்று திருமாவளவன் அவர்கள் ஒரு விமர்சனத்தை முன் வைக்கிறார். அது விமர்சனம். ஆனால், இஸ்லாமியர்கள், சிறுபான்மையினர், கிறித்துவர்கள், மொழி சிறுபான்மையினர் என்று பிரித்து நாம் தேர்தலை அணுகுவது கிடையாது. அவர்களையும் நாம் சக மக்களாகத்தான் மதிக்கிறோம். இந்தியர்களாகிய நாம் என்று தான் ‘இந்தியா கூட்டணி’ என்று பெயர் வைத்து அவர்கள்பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது இந்துக்களைத்தனியாக, இஸ்லாமியர்களைதனியாக அப்படி என்று பிளவுபடுத்தக் கூடிய கருத்துகளை தொடர்ந்து பி.ஜே.பி. பேசிக் கொண்டே இருக்கிறது என்பதினுடைய விளைவு தான் இங்கு இஸ்லாமியர்களின் வாக்குக்காக தனியாக எடப்பாடி பழனிச்சாமி பேசிக் கொண்டிருப்பது. கிறித்துவர்களுடைய வாக்குகளை தனியாக குறி வைத்து தனியாக எடப்பாடி பழனிச்சாமி பேசிக்கொண்டிருப்பது. எனக்கு ஒரே ஒரு டவுட். இது வரை பி.ஜே.பி.யோடு கூட்டணியில் இருந்து முரண்பட்டு பிரிந்த கட்சிகள் ஒன்றாக இருந்ததே இல்லை. அப்படி ஒன்றாக இருந்தாலும் அந்தக் கட்சி பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறது. மகாராஷ்டிராவில் சிவசேனாவில் இரண்டு பிளவுகள் ஒன்று உத்தவ் தாக்கரே, இன்னொன்று ஷிண்டே. இப்போது பி.ஜே.பி. ஆதரிக்கின்ற ஷிண்டேவுக்கு சின்னமும் கட்சியும் கிடைக்கிறது. எடப்பாடி அவர்களுக்கு எப்படி இந்தப் பிரச்சினை வராமல் இருக்கிறது என்ற சந்தேகம் இருக்கிறது.

இவ்வாறு இந்திரகுமார் தேரடி விவாதத்தில் பங்கேற்று பேசினார்.



சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (08.03.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கான பணி ஆய்வுக்கூட்டம் மற்றும் புத்தாக்கப்பயிற்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் இல.சுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ், மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (8.3.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களின் சிறந்த படைப்புகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குனர் த.ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குனர் ச.அண்ணாதுரை மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.